**எஸ்.டி.சி .எண்.2925/2023 நாள்– 09.03.2026 பக்கம் 335 /2023**

**ம.சா . 1 சதாசிவம் த/பெ. ராமசாமி**

**எதிரி ஆஜர்.**

**C.M.P 3965/2023 கடந்த 17.10.2023 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

1) நான் B.E படித்துள்ளேன். நான் கடந்த 32 ஆண்டுகளாக நுல் வியாபாரம் செய்து வருகிறேன். எனது நிறுவனம் செங்குந்தபுரம், 80 அடி ரோட்டில் அமைந்துள்ளது– நான் பல துணை நிறுவனங்களை ஒரே விலாசத்தில் வைத்து நடத்தி வருகிறேன். என்னுடன் சாட்சியம் அளிக்க செல்லமுத்து என்பவர் வந்துள்ளார். அவரை நான் தான் பலமுறை இவ்வழக்கு வாய்தாவிற்காக அழைத்து வந்தேன். ம.சா.2 எனது வேண்டுகோளின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளார். ம.சா.2 எழுத்துப்பூர்வமான பிரமாண வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார், அதில் என்ன எழுதி இருந்தது என்பது எனக்கு தெரியும். ம.சா.2 ன் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை செல்லமுத்து கூற எனது வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்தார்.

2) ம.சா.2 க்கு இவ்வழக்கு விவரங்களை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். செல்லமுத்து என்ன படித்துள்ளார் என்றால் கல்லூரி படிப்பு முடித்துள்ளார். ம.சா.2 விவசாயம் மற்றும் பைனாஸ் தொழில் செய்து வருகிறார். ம.சா.2 செல்லமுத்து எனக்கு 15 வருடமாக தெரியும். ம.சா.2 வேறு எந்த வழக்கிற்காக சாட்சியம் அளித்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது– நான் வருமான வரி செலுத்தி வருகிறேன்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்**

இவ்வழக்கின் எதிரியை எனக்கு 20 வருடமாக பழக்கம் எதிரி மில்லில் உற்பத்தியான நூலை எனக்கு சப்ளை செய்து வந்தார். எதிரி உடுமலைப்பேட்டையில் வசித்து வருகிறார்.

3) கரூர் – உடுமலை பேட்டை 120 கி.மீ இருக்கும். எதிரியின் உடுமலைபேட்டை பெதப்பம்பட்டியில் VJ டெக்ஸ் என்ற பெயரில் நூல் மில் வைத்திருந்தார். நான் எதிரியின் மில்லில் கொரான காலத்திற்கு சிறிது காலம் முன்பு வரை நூல் கொள்முதல் செய்துவந்தேன். எந்த காலம் முதல் எந்த காலம் வரை நான் நூல் கொள்முதல் செய்தேன் என்றால் 2019 க்கு முன்பு வரை கொள்முதல் செய்தேன். இந்த மில்லில் சூர்யா யார்ன் ஏஜென்ஸி என்ற பெயரில் உள்ள எனது நிறுவனத்திற்கு எதிரியிடமிருந்து நூல் கொள்முதல் செய்தேன். நான் நடத்தி வரும் வேறு நிறுவனத்தின் பெயரில் எதிரியிடம் நூல் கொள்முதல் செய்தேனா என்றால் இல்லை.

4) நான் எதிரியிடம் கொள்முதல் செய்த நூல்களின் மதிப்பு சுமார் எவ்வளவு இருக்கும் என்றால் ஞாபகமில்லை. எனது மனைவி ராதா என்றால் சரிதான். எனது மனைவியின் பெயரில் தனியாக நிறுவனம் கிடையாது. ஆனால் வேறு சில நிறுவனங்களில் பங்குதாரராக உள்ளார். எனது மனைவி நேரடியாக எதிரி நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதில்லை. ஆனால் எதிரி நிறுவனத்திற்காக விற்று கொடுக்கும் வகையில் கமிஷன் தொகையை எதிரி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வார். எதிரி நிறுவனத்தில் கொள்முதல் செய்ததற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது.

ஓம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்**

5) அந்த ஆவணங்களை வருமான வரிக்கு உட்படுத்தி உள்ளேன். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் சொல்வதுபோல் எதிரி நிறுவனத்தில் வியாபாரம் செய்ததில் பல கோடிக்கு வியாபாரம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனகும் எதிரிக்கும் இடையயோன வியாபார பரிவர்த்தனை வங்கி கணக்கு மூலம் தான் நடைபெறும் என்றால் சரிதான்.

6) எதிரியின் மீது வேறு எந்த வழக்காவது உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பங்குதாரராக உள்ள நிறுவனத்திற்கு வரவேண்டிய தொகை கேட்டு நீதிமன்றத்தில் வேறு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. எதிரி என்னிடம் ரூ-30 இலட்சம் கடன் வாங்கியதாக இவ்வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லப்படும் தேதியில் ரூ-30 இலட்சம் பணம் என்னிடம் எவ்வாறு வந்தது என்றால் நான் ரொக்கமாக வைத்திருந்தேன். இந்த பணத்தை நான் வங்கியிலிருந்து எடுத்து வைத்திருந்தேனா என்றால் இல்லை.

7) மேற்படி ரூ-30 இலட்ச தொகையில் என் கைவசம் ரூ- 15 இலட்சம் இருந்தது மீதி ரூ.15 இலட்சம் என்னிடம் ஏற்கனவே பணம் கடனாக பெற்றிருந்தவர்கள் திரும்பி செலுத்தியது இருந்ததால் அதனையும் எதிரிக்கு கடனாக கொடுத்துவிட்டேன். மேற்படி ரூ-15 இலட்சம் என்னிடம் கைமாற்று கடனாக பெற்று பின்னிட்டு கொடுத்த நபரின் பெயர் விஜயன் அவர் கொங்குநகர் , வெங்கமேடு பகுதியை சேர்ந்தவர். மேற்படி விவரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

8) எதிரி என்னிடம் கடன் பெற்றதற்காக நான் அவரிடமிருந்து என்ன ஆவணம் பெற்றேன் என்றால் எதிரிக்கு கடன் கொடுக்கும் போது 2 புரோ நோட்கள் மட்டும் பெற்றுக்கொண்டேன். எதிரி என்னிடம் கடன் தொகையை கடன் பெற்ற தேதியன்று கேட்டாரா அல்லது அதற்கு முன்பு கேட்டாரா என்றால் அதற்கு முன்பு ஒரு மாதத்திற்குள் 2, 3 முறை கேட்டார். இந்த புரோ நோட் எனது வீட்டில் காலை சுமார் 10–11 மணிக்கு எழுதப்பட்டது. எதிரி எனது வீட்டிற்கு வரும் போது அவருடன் ராஜேந்திரன் என்பவர் வந்தார்.

9) அந்த ராஜேந்திரன் என்பவரை எனக்கு தெரியும். ராஜேந்திரன் கரூரில் நுல்கடை வைத்துள்ளார் அந்த வகையில் எனக்கு பழக்கம். ராஜேந்திரனை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் தேவைபட்டால் விசாரிப்பேன். நான் குடியிருக்கும் பகுதியில் உள்ள அக்கம் பக்கத்தினர் எனக்கு பழக்கமானவர்கள். நான் குடியிருக்கும் வீட்டில் சுமார் 10 வருடமாக உள்ளேன். செல்லமுத்துவின் வீடு என் வீட்டிலிருந்து சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ளது– ராஜேந்திரன் ராம் நகரில் வசித்து வருகிறார். ராஜேந்திரன் வீடு என் வீட்டிலிருந்து சுமார் 3 கி.மீ தொலைவில் உள்ளது–

10) அக்கம் பக்கத்தில் எனக்கு தெரிந்த நபர்கள் இருக்கும் பொழுது எதற்காக துாரத்தில் உள்ள நபர்களை சாட்சியாக கொண்டீர்கள் என்றால் ராஜேந்திரனை எதிரி அழைத்து வந்தார். எதிரி கடன் பெறும்போது செல்லமுத்து உடன் இருந்தார். அதனால் அவர்கள் புரோ நோட்டில் சாட்சிகளாக கையொப்பம் செய்தனர். செல்லமுத்துவிற்கு புரோ நோட் எழுதி பழக்கம் உள்ளதா என்றால் அவரை தான் கேட்க வேண்டும்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

எதிரி கடன் பெறும் பொழுது எனது வீட்டில் உள்ள நபர்கள் வெளியில் சென்றிருந்தார்கள். நானும் செல்லமுத்து மட்டும் தான் இருந்தோம்.

11) எதிரி கடன் பெறும் சமயத்தில் என்னுடன் எனது மனைவி, எனது தாயார் எனது இரண்டு குழந்தைகள் வசித்து வந்தனர். கடன் தொகையை எதிரிக்கு நான் கொடுக்கும் பொழுது எதிரி எதன் அடிப்படையில் திரும்ப செலுத்துவார் என தெரிந்து கொண்டேன் என்றால் அவர் நுற்பாலை வைத்திருப்பதால் நம்பி கொடுத்தேன். கடன் தொகையை நான் ரொக்கமாக கொடுத்தேன். வருமான வரி சட்டப்படி ரூ– 20 ஆயிரத்திற்கு மேல் செலுத்தினால் வங்கி பரிவர்த்தனை மூலம் தான் செலுத்த வேண்டும் என்பது தெரியுமா என்றால் தற்போது தான் அந்த நடைமுறை உள்ளது நான் எதிரிக்கு கடன் கொடுக்கும் சமயத்தில் ஏதாவது ஒரு பரிவர்த்தனை அதாவது கடன் கொடுப்பது அல்லது வாங்குவது வங்கிமூலம் இருக்க வேண்டும்.

12) நான் எதிரிக்கு கொடுத்த கடன் தொகையை எனது வருமான வரி கணக்கில் குறிப்பிட்டு காட்டியுள்ளேனா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்வதற்கான வகைப்பாடு இல்லை என்பதால் பொதுவாக வர வேண்டிய தொகை மட்டும் இருக்கும் என எனக்கு தெரியும் மற்ற விவரங்கள் எனது ஆடிட்டருக்கு தான் தெரியும். நான் எதிரிக்கு கடன் கொடுத்த காலகட்டத்தில் தாக்கல் செய்த வருமான வரி கணக்கை இந்நீதிமன்றத்தில்தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எதிரிக்கு கொடுத்த கணக்கிற்காக தனியாக கணக்கு பதிவேடு பராமரித்து வருகிறேனா என்றால் ஆமாம். அதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

ஓம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

13) நான் எதிரியின் பெயரில் வழக்கு கடனுக்கு கணக்கு பராமரித்து வருவதாக எனது முறையீட்டிலும் எனது சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. இவ்வழக்கு புரோ நோட்டு படிவம் அதில் ஒட்டப்பட்ட Revenue Stamp ஆகியவற்றை எதிரி தான் கொண்டு வந்தார். அதை நான் ஏன் வாங்கி வைக்கவில்லை என்றால் அவர் வீட்டில் வந்து கடன் பெற்று சென்றார், புரோ நோட் படிவம், Stamp கள் எனது அலுவலகத்தில் தான் இருக்கும். எதிரிக்கு என்னால் இவ்வழக்கு கடன் கொடுத்தாக சொல்லப்படும் தொகைக்கு வட்டி எவ்வளவு என்றால் நாள் ஒன்று ரூ– 100 க்கு ரூ–0.07 பைசா வீதம் ஆகும். மேற்படி கடன் தொகைக்கு மாதம் எவ்வளவு வட்டி வரும் என்றால் தற்போது என்னால் கணக்கிட்டு சொல்லமுடியவில்லை.

14) மேற்படி கடன் தொகையை எதிரி அவர் செய்து வரும் நுற்பாலை மில்லிற்காகவும் மற்றும் குடும்ப செலவிற்காக பெற்றுக்கொண்டார். குடும்ப செலவு என்ன என்றால் நான் குறிப்பிட்டு கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி கடன் தொகை என்ன தேவைக்காக எதிரி பெற்றுக்கொண்டார் என்று நான் உறுதி செய்யவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுத்தாக சொல்லப்படும் பணம் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அந்த ரூபாய் தாள் கட்டுகளை எதிரியே எண்ணி பெற்றுக்கொண்டார். இந்த வழக்கில் இரண்டு புரோ நோட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அவை அடுத்தடுத்து எழுதப்பட்டது.

15) ஏன் ஒரே புரோட்டாக எழுதிக்கொள்ளப்படாமல் இரண்டு புரோ நோட்டுகளாக எழுதிக்கொள்ளப்பட்டது என்றால் முதலில் என்

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

கைவசம் ரூ–15 இலட்சம் இருந்தது அந்த தொகையை கொடுத்து ஒரு புரோ நோட் எழுதிக்கொள்ளப்பட்டது. அதன் பின்னிட்டு ரூ– 15 இலட்சம் விஜயன் மூலம் கிடைத்தால் அந்த தொகையை கொடுத்து மற்றொரு புரோ நோட் எழுதிக் கொள்ளப்பட்டது. விஜயன் மேற்படி கடன் பரிவர்த்தனையின் போது உடன் இருந்தாரா என்றால் பணம் கொடுத்தவுடன் சென்றுவிட்டார்.

16) இரண்டு புரோநோட் எழுதுவதற்கு தலா 10 நிமிடம் எடுத்துகொள்ளப்பட்டது. எதிரி தேவராஜ்க்கு எழுதப்படிக்க தெரியும். ஏன் எதிரியே புரோ நோட்டை பூர்த்தி செய்யவில்லை என்றால் எதிரி சொன்னதன் பேரில் செல்லமுத்து எழுதினார். எதிரிக்கும் செல்லமுத்துவிற்கும் நல்ல பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. இரண்டு புரோ நோட்டுகளிலும் Stamp ன் மீது தலா ஒரு கையொப்பம் எதிரி செய்தார். பொதுவாக Stamp ன் மீதும் Stamp ன் கீழ் புரோ நோட்டில் கையெழுத்து பெறுவது வழக்கம் என்றால் சரிதான்.

17) அந்த புரோ நோட்டில் கை ரேகை எதுவும் பெறப்படவில்லை. ஏன் அவ்வாறு கைரேகை பெறப்படவில்லை என்றால் அது போன்ற நடைமுறை அப்போது இல்லை. இரண்டு புரோ நோட்டிலும் எதிரியின் கையெழுத்து என்று சொல்லப்படும் கையெழுத்து வேறு ஒரு மை பேனாவிலும் புரோ நோட்டுகள் வேறு ஒரு மை கொண்ட பேனாவாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி அவர் கொண்டு வந்த பேனாவில் கையொப்பம் செய்தார். செல்லமுத்து அவர் கொண்டு வந்த பேனாவில் புரோ நோட்டை பூர்த்தி செய்தார். சாட்சி கையொப்பம் ராஜேந்திரன் போட்டுள்ளார். அவர் பெயர் மற்றும் விலாசத்தை ராஜேந்திரன் கொண்டு வந்த பேனாவில் எழுதியுள்ளார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

18) இந்த இரண்டு புரோ நோட்டுகளும் ஒரே மாதிரி காணப்படுகிறது என்றால் சரிதான். இந்த இரண்டு புரோட்டுகளில் எது முதலில் எழுதப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. பொதுவாக இரண்டாவதாக கடன் பெற்றிருந்தால் இரண்டாவது புரோட்டில் முதலில் பெற்ற கடன் குறித்த குறிப்புகள் இருக்கும் என்றால் அதுபோன்று நடைமுறை இல்லை. இரண்டு கடனுறுதி சீட்டிலும் எதிரியின் கையெழுத்து என்று கூறப்படும் கையெழுத்துகள் எதிரியின் கையெழுத்துகள் அல்ல, அவை மோசடியாக தயாரிக்கப்ட்டவை என்று சொன்னால் சரியல்ல.

19) முதலில் ஒரு புரோ நோட் மாதிரிக்காக எழுதப்பட்டது என்றும், பின்னிட்டு அதை பார்த்து அசலாக ஒரு புரோ நோட் தயாரிக்க பட்டது என்றும், அந்த இரண்டையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வாதம் செய்து வருகின்றேன் என்றால் சரியல்ல. ரூ.30 இலட்சம் அளவிலான கடன் தொகையை எதிரிக்கு கொடுத்திற்கும்போது பொறுப்பிற்காக புரோ நோட்டுகளை தவிர ஏன் வேறு ஆவணங்களை பெறவில்லை என்றால் எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே நிறைய வரவு செலவுகள் சரியான முறையில் இருந்து வந்ததாலும், எதிரியின் மீது உள்ள நம்பிக்கையில் அடிப்படையில் கேட்டு பெறவில்லை.

20) மேற்படி கடன் தொகைக்காக எதிரி எத்தனை மாதங்கள் வட்டி தொகை செலுத்தினார் என்றால் தொகை எதுவும் செலுத்தவில்லை. அதற்கு ஆதரவாக இவ்வழக்கு 4 காசோலைகளை அதாவது வட்டி தொகையில் ஒரு பகுதிக்காக 2ம் அசல் தொகையில் ஒரு பகுதிக்காக 2ம் ஆக மொத்தம் நான்கு காசோலைகளைகொடுத்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

ஆனால் அதுவும் வசூல் ஆகவில்லை. இவ்வழக்கு காசோலைகளை எதிரி எனக்கு எங்கு வைத்து கொடுத்தார் என எனது வழக்கு ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

21) மேற்கொண்ட நான்கு காசோலைகளிலும் எதிரியின் கையொப்பம் ஒரு மையிலும், இதர குறிப்புகள் வேறு மையிலும் உள்ளது என்றால் சரிதான். நான்கு காசோலைகளை ஒரே நேரத்தில் எதிரி என்னிடம் கொடுத்தார். அந்த நான்கு காசோலைகளை ஒரே நாளில் தான் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஒரே நாளில் நான்கு காசோலைகளையும் கொடுத்தாக சொல்லப்படும் நிலையில் ஏன் ஒரே காசோலையாக பெறவில்லை என்றால் எதிரி தானாக பூர்த்தி செய்த காசோலைகளை கொண்டு வந்து கொடுத்தார். என் முன்னிலையில் பூர்த்தி செய்யவில்லை.காசோலை கொடுத்தாக சொல்லப்படும் தேதியில் எவ்வளவு வட்டி எதிரி கொடுக்க வேண்டும் என்றால் அதனை கணக்கிட்டு தான் சொல்ல வேண்டும். எதிரி தற்போது என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் தற்போது தெரியவில்லை.

22) 01.12.2020ம் தேதியன்று இவ்வழக்கு காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்யவேண்டாம் என்று எதிரி என்னிடம் கேட்டுக்கொண்டார் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. 28.12.2020ம் தேதியன்று எதிரி என்னை வசூலுக்கு மேற்படி காசோலை தாக்கல் செய்ய எழுத்துப்பூர்வமாக கேட்டுக்கொண்டாரா என்றால் இல்லை. வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியின் கணக்கில் போதிய இருப்பு உள்ளதா என்பதை விசாரித்தேனா என்றால் அவ்வாறு வங்கியில் சென்று விசாரிக்க இயலாது.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

23) 13.03.2021ம் தேதிக்குள் புகாரை தாக்கல் செய்து இருக்கவேண்டும் ஆனால் 17.03.2021ம் தேதியன்று கால தாமதமாக எவ்வித மனுவும் இல்லாமல்தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 2017ம் ஆண்டுக்கு பிறகு எதிரிக்கும் எனக்கு எந்த வித வியாபார பரிவர்த்தனையும் இல்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. அதனால் 2019ம் ஆண்டு எதிரி என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நான் கடனாக கொடுத்தாக சொல்லப்படும் ரூ– 30 இலட்சத்திற்கு மாத வட்டியாக ரூ– 63,000/– வரும் என்றால் நாங்கள் நாள் கணக்கில் தான் வட்டி கணக்கீடு செய்வோம். புரோ நோட் எழுதிக்கொடுத்தற்கும் காசோலை கொடுத்தற்கும் எவ்வளவு காலம் இடைவெளி என்றால் சுமார் 14 மாதங்கள் இருக்கும்.

24) உண்மையில் வருமான வரி கணக்குகளை சரிசெய்யும் பொருட்டு நூல்களை உண்மையில் கொள்முதல் செய்யாமல் பொய்யாக இன்வாய்ஸ் அடிப்படையில் நுல்கள் சப்ளை செய்தது போன்று பில்களை பெற்றுக்கொண்டு அதற்கு தொகையை நான் வங்கி மூலம் எதிரிக்கு அனுப்புவேன் என்றும், பின்னிட்டு அந்த தொகையை எதிரியிடமிருந்து ரொக்கமாக பெற்றுக்கொள்வேன் என்றும், அதற்காக எதிரி என்னிடம் கமிஷன் பெற்றுக்கொள்வார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பரிவர்த்தனை நடைபெற்ற காலங்களில் எதிரியிடமிருந்து வழக்கு வெற்றுக் காசோலைகளை பெற்று வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலைகள் 2018ம் ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்தது என்றால் சரியல்ல.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

25) உண்மையில் நான் தான் எதிரிக்கு பெருமளவு கமிஷன் தொகை செலுத்த வேண்டியிருந்தது என்றால் சரியல்ல. எதிரி நான் செலுத்த வேண்டிய தொகையை எதிரி என்னிடம் தொடர்ச்சியாக வற்ப்புறுத்தி வந்ததால் இவ்வழக்கு காசோலைகளை தவறாக பயன்படுத்தி பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு அறிவிப்பிற்கு பின்னிட்டு எதிரி என்னை எதற்காக இந்த அறிவிப்பு அனுப்பினீர்கள் என்று கேட்தற்கு நீங்கள் சொல்வது போல் கமிஷன் தொகையெல்லாம் தரமுடியாது நானா பார்த்து கொடுப்பதை வாங்கி கொண்டு போங்கள் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. எனது வார்த்தையை நம்பி எதிரி எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்ப வில்லை என்றால் சரியல்ல.

26) அதன் பின்னிட்டும எதிரி என்னை தொடர்ச்சியாக கமிஷன் தொகை கேட்டு வற்புறுத்தி வந்ததால் இவ்வழக்கு பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த கடனும் கொடுக்கவில்லை என்றாலும், அதற்காக எந்த காசோலைகளையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2019ம் ஆண்டே எதிரிக்கு ஏற்பட்ட தொழில் நஷ்டம் காரணமாக அவரது நுற்பாலையை மூடிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி வங்கியில் பெற்ற கடனுக்காக அவரது சொத்துக்கள் ஏலத்தில் விடப்பட்டு விட்டன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

அதனால் பொய்யாக ஆவணங்களை உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்
**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

**எஸ்.டி.சி .எண்.2925/2023 நாள்– 09.03.2026 பக்கம் 335 /2023**

**ம.சா .2 செல்லமுத்து த/பெ. மாரப்பன்**

**எதிரி ஆஜர்.**

**C.M.P 3965/2023 கடந்த 17.10.2023 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

1) இவ்வழக்கிற்கு சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை எதுவும் நீதிமன்றத்தில் வரவில்லை என்றாலும், சதாசிவம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ளசங்கதிகள் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் முறையீட்டாளர் மூலம் தெரியும். நான் B.Sc வரை படித்துள்ளேன். நானும் ம.சா.1 பக்கத்து பக்கத்து தெருவில் கடை வைத்துள்ளோம். பக்கத்து பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள். எனக்கு இதற்கு முன்பு புரோ நோட் எழுதிய பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது.

2) நீதிமன்றத்தில் எனக்கு சாட்சியம் அளித்த அனுபவம் உள்ளதா என்றால் ஒரு முறை சாட்சியம் அளித்துள்ளேன். முறையீட்டாளர் என்ன தொழில் செய்கிறார் என்றால் எனக்கு சரியாக தெரியாது. எதிரி தேவராஜ்யை எனக்கு தெரியாது– இரண்டு புரோ நோட் நான் தான் எழுதினேன். அதில் சாட்சி கையொப்பம் செய்தது ராஜேந்திரன் ஆவார். ராஜேந்திரன் எனக்கு பழக்கம் இல்லை. அந்த ராஜேந்திரன் ம.சா.1 ககு பழக்கமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது– எதிரி எதற்காக கடன் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. புரோ நோட் ம.சா.1 ன் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. புரோ நோட் எழுதப்பட்ட நேரம் சுமார் 10 முதல் 10.45 மணி வரை இருக்கும்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

3) புரோ நோட் எழுதும்போது நான், ம.சா.1 , தேவராஜ் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் இருந்தோம். கடனாக மொத்தம் ரூ- 30 இலட்சம் கொடுக்கப்பட்டது. ரூ.30 இலட்சம் இரண்டு தவணையாக கொடுக்கப்பட்டது. முதலில் ரூ.15 இலட்சம் கொடுக்கப்பட்டது. அதன் பின்னிட்டு ரூ- 15 இலட்சம் கொடுக்கப்பட்டது- ரூ- 30 இலட்சம் ம.சா.1 க்கு எவ்வாறு அவர் வசம் வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது- கடன் தொகை கொடுத்த தேதி 08.08.2019 ம் தேதி ஆகும். கடன் கொடுத்த தேதியன்று முறையீட்டாளர் வீட்டில் யாரும் இல்லை. மேற்படி கடனுக்க வட்டி நாள் ஒன்றுக்கு ரூ-100 க்கு ரூ.0.07 பைசா ஆகும். 60 ரூ-500 /- நோட்டுகட்டுகளாக கடன் கொடுக்கப்பட்டது. இந்த பணம் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) புரோ நோட்டில் எதிரியிடம் எத்தனை கையொப்பம் வாங்கப்பட்டது என்றால் இரண்டு புரோட்டிலும் தலா ஒரு கையொப்பம் Stamp ன் மீது வாங்கப்பட்டது. பொதுவாக புரோ நோட்டில் Stamp ல் மீதும் Stamp ன் கீழ் ஒரு கையொப்பமும் வாங்குவது தான் வழக்கம் என்றால் சரிதான். புரோ நோட்டில் கை ரேகை எதுவும் வாங்கவில்லையா என்றால் கை ரேகை வைக்கும்படி முறையீட்டாளருக்கும் சொல்லவில்லை, எதிரியும் சொல்லவில்லை. எதிரிக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி கையெழுத்து என்று சொல்லப்படும் கையெழுத்து ஒரு பேனாவிலும், கடனுறுதிச்சீட்டு வேறு ஒரு பேனாவிலும் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

ராஜேந்திரன் என்பவரின் பெயர் விலாசம் யார் எழுதினார்கள் என்றால் அவரே புரோ நோட்டிகளில் கையொப்பம் செய்து அவரது பெயர் விலாசத்தை எழுதினார்.

5) இரண்டு புரோ நோட்டுகளும் ஒரே மாதிரி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புரோ நோட்டுகளை பார்த்தால் முதலில் எது எழுதப்பட்டது என்பது தெரியுமா என்றால் தற்போது சொல்ல இயலாது. பொதுவாக ஒரு நபர் அதே நபரிடம் மீண்டும் கடன் வாங்கினால் முன்கடன் நிற்க என்ற குறிப்புடன் இரண்டாவது புரோ நோட் எழுதப்படும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு புரோ நோட்டிகளில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது அல்ல என்றாலும், அதனை நான் சதாசிவம் , ராஜேந்திரன் சேர்ந்து பொய்யாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மாதிரிக்காக எழுதப்பட்ட புரோ நோட்டை அசல் போன்று இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு புரோ நோட்டுகள் அதற்குண்டான Stamp கள் யார் வாங்கி வந்தார்கள் என்றால் தேவராஜ் தான் வாங்கி வந்தார்.

6) புரோ நோட்டுகளை ஏன் வாங்கி வைக்கவில்லை என சதாசிவத்திடம் கேட்டேனா என்றால் இல்லை. கடன் தொகையை யார் எண்ணினார்கள், எப்படி எண்ணினார்கள் என்றால் தேவராஜ் கட்டுகட்டாக எண்ணி பார்த்துக்கொண்டார். தேவராஜ்க்கும் சதாசிவத்திற்கும் வியாபர பரிவர்த்தனை நடவடிக்கை இருந்தது தெரியுமா என்றால் தெரியாது—

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**

நான் சதாசிவத்தின் நண்பன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி சதாசிவத்திடம் எவ்வித கடன் தொகையும் பெறவில்லை என்றாலும், வழக்கு புரோ நோட்டுகளையும் அதற்காக ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல, அது காரணத்தினால் எனது சாட்சியம் ஏற்க தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்
**நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.**